# தமிழ்நாடு மாநிலம்- பொது அறிவு கேள்வி மற்றும் பதில்கள் தமிழில்

**Q1.** கம்பர், யாருடைய அவையில் அவைப்புலவராக இருந்தார்?
In whose court was Kambar, a royal poet?
(a) அரிமர்த்தன பாண்டியன்
(b) குலோத்துங்க சோழன்
(c) ராஜராஜ சோழன்
(d) சிம்மவிஷ்ணு

**Q2.** பிற்கால சோழர் இலக்கியமான கலிங்கத்துப்பரணியை படைத்தவர் யார்?
Who is the author of the later Chola literary Kalingathuparani?
(a) குலோத்துங்க சோழன்
(b) குமரிலபட்டர்
(c) ஜெயங்கொண்டார்
(d) பரஞ்சோதி முனிவர்

**Q3.** கவிஞர் கண்ணதாசனின் இயற்பெயர் யாது?
What is the birth name of the poet Kavignar Kannadasan?
(a) கண்ணப்பன்
(b) லெட்சுமணன்
(c) அழகப்பன்
(d) முத்தையா

**Q4.** தமிழ்த்தூதர் என்று அழைக்கப்படுபவர் யார்?
Who is also known as the 'Tamil Ambassador'?
(a) ஒட்டக்கூத்தர்
(b) தனிநாயம் அடிகள்
(c) கால்டுவெல்
(d) சந்திரன் சுவர்க்கி

**Q5.** முதல் தமிழ் சங்கத்தின் இலக்கண நூல் எது?
Which was the grammar book of the first Tamil Sangam?
(a) அகத்தியம்
(b) தொல்காப்பியம்
(c) இலக்கண விளக்கம்
(d) இவற்றில் ஏதுமில்லை



**Q6.** ஆற்றுப்படை நூல்களில் சிறியது எது?
Which is the smallest of the Aatruppadai compilation?
(a) சிறுபாணாற்றுப்படை
(b) பொருநராற்றுப்படை
(c) பெரும்பாணாற்றுப்படை
(d) திருமுருகாற்றுப்படை

**Q7.** பின்வரும் நூல்களில் எது, நெஞ்சாற்றுப்படை என்றும் அழைக்கப்படுகிறது?
Which of the following books is also known as Nenjaatruppadai?
(a) பொருநராற்றுப்படை
(b) முல்லைப்பாட்டு
(c) திருமுருகாற்றுப்படை
(d) குறிஞ்சிப்பாட்டு

**Q8.** நீதி நூல்களில் மிகப்பெரிய நூல் எது?
Which is the largest book among the books of law?
(a) இன்னாநாற்பது
(b) ஏலாதி
(c) நாலடியார்
(d) திருக்குறள்

**Q9.** அரிச்சந்திர புராணத்தை இயற்றியவர் யார்?
Who composed the Harichandra Puranam?
(a) வடமலையப்பர்
(b) வீரகவிராயர்
(c) உமாபதி சிவாச்சாரியார்
(d) கச்சியப்ப முனிவர்

**Q10.** தமிழின் மிகப்பெரிய நூல் எது?
Which is the largest book in Tamil?
(a) கம்பராமாயணம்
(b) திருக்குறள்
(c) தொல்காப்பியம்
(d) அகத்தியம்

**Q11.** திருக்குறளை முழுமையாக ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?
Who completely translated Thirukkural into English?
(a) வீரமாமுனிவர்
(b) ஜி.யு.போப்
(c) கால்டுவெல்
(d) ராபர்ட் நொபிலி

**Q12.** சஞ்சீவி பர்வதத்தின் சாரல் என்ற நூலை இயற்றியவர் யார்?
Who is the author of the book 'Sanjeevi Parvathatthin Saaral'?
(a) பாரதியார்
(b) பாரதிதாசன்
(c) வாணிதாசன்
(d) கண்ணதாசன்

**Q13.** இந்திர விழா பின்வரும் யாருடன் தொடர்புடையது?
Indra festival is associated with which of the following?
(a) சேரர்கள்
(b) சோழர்கள்
(c) பாண்டியர்கள்
(d) பல்லவர்கள்

**Q14.** திருநாவுக்கரசர் பிறந்த ஊர் எது?
In which place was Thirunavukkarasar born?
(a) திருவாதவூர்
(b) திருவாமாத்தூர்
(c) திருவாமூர்
(d) திருநாவலூர்

**Q15.** திரிபுரம் எரித்த விரிசடை என்பது எந்த கடவுளை குறிக்கிறது?
Thiripuram erittha virisadai refers to which of the following deities?
(a) பார்வதி
(b) சிவன்
(c) விஷ்ணு
(d) முருகன்

**Q16.** தமிழில் முதல் இசை நூல் எது?
Which was the first music book in Tamil?
(a) பரிபாடல்
(b) கலித்தொகை
(c) பத்துப்பாட்டு
(d) பஞ்சமரபு



**Q17.** குடவோலை தேர்தலை பற்றி கூறும் நூல் எது?
Which book tells about the Kudavolai system of election?
(a) புறநானூறு
(b) பதிற்றுப்பத்து
(c) ஐங்குறுநூறு
(d) அகநானூறு

**Q18.** விடுதலை போராட்டத்தின் பொது சிறந்து விளங்கிய மணிக்கொடி இதழின் ஆசிரியர் யார்?
Who is the editor of 'Manikkodi' magazine which was famous during the freedom struggle?
(a) பாரதிதாசன்
(b) பெரியாழ்வார்
(c) சிதம்பரனார்
(d) இராமையயர்

**Q19.** தமிழ்நாட்டின் வரலாற்று நாவலின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
Who is known as the father of Tamil Nadu's historical novel?
(a) வாணிதாசன்
(b) மறைமலையடிகள்
(c) கல்கி கிருஷ்ணமூர்த்தி
(d) சுரதா

**Q20.** தமிழ் கவிஞர்களுள் அரசர் என்று போற்றப்படுபவர் யார்?
Who among these is known as the king of Tamil poets?
(a) அகத்தியர்
(b) கம்பர்
(c) திருத்தக்கதேவர்
(d) சேக்கிழார்

**Q21.** யாருடைய நூல்கள், தமிழ் உபநிடதங்கள் என்று அழைக்கப்படுகின்றன?
Whose texts are called Tamil Upanishads'?
(a) ஒட்டக்கூத்தர்
(b) தாயுமானவர்
(c) வாணிதாசன்
(d) சேக்கிழார்

**Q22.** தென்னாட்டின் தாகூர் என்று அழைக்கப்பட்டவர் யார்?
Who is also known as the Tagore of the South?
(a) மாதவ ஐயர்
(b) வெங்கடரமணி
(c) பாரதிதாசன்
(d) பாரதியார்

**Q23.** பின்வரும் யார், வீடு வீடாக சென்று பிச்சையெடுத்து தமிழ் தொண்டாற்றினார்?
Who among the following went from house to house begging and volunteering for Tamil?
(a) சுவாமிநாதன்
(b) இளஞ்சூரியன்
(c) தாயுமானவர்
(d) ஆறுமுக நாவலர்

**Q24.** எந்த நதியை பொய்யாக் குலக்கொடி என்று இளங்கோவடிகள் குறிப்பிட்டார்?
Which river was referred to as Poyyaa Kulakkodi by Ilangovadigal?
(a) காவிரி
(b) வைகை
(c) தாமிரபரணி
(d) கங்கை

**Q25.** ஞானபீட விருது பெற்ற முதல் நாவல் ஆசிரியர் யார்?
Who was the first author to receive the Jnanpith Award?
(a) ஆதித்தனார்
(b) மகாதேவன்
(c) அகிலன்
(d) நாகராஜன்

**Q26.** உரைநடையின் இளவரசு என்று அழைக்கப்படுபவர் யார்?
Who was called as the prince of prose?
(a) கண்ணதாசன்
(b) திரு.வி.க
(c) வாணிதாசன்
(d) தாண்டவராய முதலியார்



**Q27.** திராவிட சிசு என்று அழைக்கப்படுபவர் யார்?

Who is also known as Dravida Sisu?

(a) சுந்தரர்

(b) சடையப்பர்

(c) சம்பந்தர்

(d) பாரதிதாசன்

**Q28.** தமிழ்கவிஞர்களின் அரசி என்று அழைக்கப்படுபவர் யார்?

Who is known as the queen of Tamil poets?

(a) மீனாட்சி

(b) மங்கையற்கரசி

(c) ஆண்டாள்

(d) இவற்றில் ஏதுமில்லை

**Q29.** பிரெஞ்சு நாட்டு குடியரசுத் தலைவரிடமிருந்து செவாலியர் விருது பெற்றவர் யார்?

Who of the following received the Chevalier Award from the President of France?

(a) மீரா

(b) கண்ணதாசன்

(c) பாரதிதாசன்

(d) வாணிதாசன்

**Q30.** பின்வரும் யார், புதுமைப்பித்தன் என்ற புனைப்பெயரை கொண்டவர் ஆவார்?

Who among the following has the penname Pudhumaipitthan?

(a) சுவாமிநாதன்

(b) தேவநாயகம்

(c) விருத்தாச்சலம்

(d) தியாகராய செட்டியார்

## Solutions

**S1. Ans.(b)**

**S2. Ans.(c)**
**Sol.** கலிங்கத்துப்பரணி என்ற நூல் பரணி வகையைச் சார்ந்த சிற்றிலக்கியம் ஆகும். இந்நூல் முதலாம் குலோத்துங்க சோழனின் கலிங்கப் போர் வெற்றி குறித்துப் பாடப்பட்ட நூல் ஆகும். குலோத்துங்கனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டது. அனந்தவர்மன் என்னும் வட கலிங்க மன்னன் திறை கொடாமலிருந்த பிழையின் காரணமாக முதலாம் குலோத்துங்க சோழனின் படைத்தலைவனும் அமைச்சனுமாயிருந்த கருணாகரத் தொண்டைமான் கி.பி. 1112-ஆம் ஆண்டில் போரில் வென்ற செய்தியே நூற்பொருள்.

**S3. Ans.(d)**
**Sol.** கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா ஆகும்.

**S4. Ans.(b)**
**Sol.** தனிநாயகம் அடிகள் என்கிற வண. சேவியர் தனிநாயகம் (ஆகஸ்ட் 2, 1913 - செப்டம்பர் 1, 1980) ஈழத்துத் தமிழறிஞர், கல்வியாளர். தமிழ், ஆங்கிலம் தவிர எசுப்பானியம், உரோம மொழி, போர்த்துகீசியம், பிரெஞ்சு முதலிய மொழிகளில் சரளமாக உரையாடவும் சொற்பொழிவாற்றவும் வல்லவர்.

**S5. Ans.(a)**
**Sol.** அகத்தியம், மிகப் பழைமையான தமிழ் இலக்கண நூல் எனக் கருதப்படுகின்றது. அகத்தியர் என்பவர் இயற்றிய நூலாதலால், இது அகத்தியம் என்று வழங்கப்படுகின்றது. முதல், இடை, கடை என வரையறுக்கப்படும் முச்சங்க காலங்களிலும் இதுவே, தமிழ் இலக்கணத்துக்கான, முதல் நூலாகத் திகழ்ந்தது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**S6. Ans.(b)**
**Sol.** பொருநராற்றுப்படை என்னும் ஆற்றுப்படை நூல் கரிகால் வளவன் எனப்படும் சோழ மன்னனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்டது. முடத்தாமக் கண்ணியார் என்பது இதன் ஆசிரியர் பெயர். இது 248 அடிகளைக் கொண்ட வஞ்சியடிகள் கலந்தஆசிரியப்பாவாலானது.



**S7. Ans.(b)**

**Sol.** சங்கத் தமிழ் இலக்கியத்தில் பத்துப்பாட்டு என அழைக்கப்படும் தொகுதியின் ஒரு பகுதியே முல்லைப் பாட்டு. இத் தொகுதியுள் அடங்கியுள்ள நூல்களுள் மிகவும் சிறியது இதுவே. இது நெஞ்சாற்றுப்படை என அழைக்கப்படுகிறது.

**S8. Ans.(d)**

**Sol.** திருக்குறள், சுருக்கமாகக் குறள், ஒரு தொல் தமிழ் மொழி இலக்கியமாகும். சங்க இலக்கிய வகைப்பாட்டில் பதினெண்கீழ்க்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் திரட்டில் இருக்கும் இந்நூல் குறள் வெண்பா என்னும் பாவகையினாலான 1,330 ஈரடிச் செய்யுட்களைக் கொண்டது.

**S9. Ans.(b)**

**Sol.** அரிச்சந்திர சரித்திரம் என்னும் நூல் அரிச்சந்திர புராணம் என வழங்கப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் முற்பாதி காலம் வரையில் இந்நூல் பலராலும் பயிலப்பட்டுவந்தது. இது வடமொழி நூலைத் தழுவி எழுதப்பட்ட தமிழ்க்காப்பியம். 16 ஆம் நூற்றாண்டில் தோன்றியது.
இதன் ஆசிரியர் பெயர் 'வீரன்'. இவரைக் 'கவிராசர்' எனச் சிறப்புப்பெயரால் அழைப்பர்.

**S10. Ans.(a)**

**Sol.** இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம் எனப்பட்டது. கம்பராமாயணம் எனும் நூல் குலோத்துங்க சோழனின் ஆணைப்படி கம்பர் எனும் பெரும் புலவரால் இயற்றப்பட்ட தமிழ் நூலாகும். இந்நூல் இந்து சமய இதிகாசங்கள் இரண்டினுள் ஒன்றான இராமாயணத்தினை மூலமாகக் கொண்டு இயற்றப்பட்டதாகும்.

**S11. Ans.(b)**

**Sol.** ஜி. யு. போப் (George Uglow Pope, ஏப்ரல் 24, 1820 - பெப்ரவரி 11, 1908) கனடாவில் பிறந்து கிறிஸ்தவ சமய போதகராகத் தமிழ் நாட்டிற்கு வந்து 40 ஆண்டு காலம் தமிழுக்குச் சேவை செய்தவர். திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்.

**S12. Ans.(b)**

**Sol.** பாரதிதாசனின் காப்பியங்களில் முதலில் (1930) வெளிவந்தது 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' என்னும் காப்பியம் ஆகும்.

**S13. Ans.(b)**

**Sol.** இந்திர விழா என்பது இந்திரனை சிறப்பிக்கும் வகையில் பழந்தமிழகத்தில் கொண்டாடப்பட்ட விழாவாகும். பசி, பிணி, பகை முதலியவற்றால் துன்பம் அடையாது இருத்தல் பொருட்டுத் தெய்வத்தைக் கருதிச் செய்யும் சாந்திப் பெருவிழாவே இந்திர விழாவாகும். இவ்விழாவைத் தீவகச் சாந்தி செய்தரு நன்னாள் என்று சாத்தனார் கூறுகின்றார். தூங்கெயிலெறிந்த தொடித்தோள் செம்பியன் என்ற சோழ மன்னன் இதை தொடங்கினான்.

**S14. Ans.(c)**

**Sol.** அப்பர் திருநாவுக்கரசு நாயனார் கி.பி. ஏழாம் நூற்றாண்டு தொடக்கத்தில், தமிழ் நாட்டில் பக்தி இயக்கத்தை வளர்த்த சிவனடியார்களுள் ஒருவரும், சைவ சமயத்தவர்களால் பெரிதும் மதிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரும் ஆவார். திருநாவுக்கரசர் சோழநாட்டின் திருமுனைப்பாடி பகுதியிலிருந்த கடலூர் மாவட்டத்தில் உள்ள திருவாமூர் எனும் ஊரில் பிறந்தவர்.

**S15. Ans.(b)**

**Sol.** மேற் குறிப்பிட்ட "திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்" என்பது சிவனைக் குறிக்கிறது. இதை விளக்கும் வகையில் தொன்மக் கதையொன்று உள்ளது. அசுரர்கள் மூன்று பறக்கும் கோட்டைகளை வைத்திருந்து மக்களுக்குத் துன்பம் செய்தனர் என்றும் அக் கோட்டைகளைச் செங்கோன் எனப்பட்ட சிவன் எரித்து அழித்தான் என்பதும் அதிற் கூறப்பட்டுள்ளது. அதனால் சிவன் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் பெயர் பெற்றிருந்தான்.

**S16. Ans.(a)**

**Sol.** பரிபாடல் சங்க காலத் தமிழிலக்கியத் தொகுதியான எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.

**S17. Ans.(d)**

**Sol.** அகநானூறு எட்டுத்தொகை எனப்படும் சங்ககாலத்தமிழ் நூல் தொகுப்பில் உள்ள ஒரு நூலாகும். இந்நூல் அகத்திணை சார்ந்த நானூறு பாடல்களின் தொகுப்பாக விளங்குவதால் அகநானூறு என வழங்கப்படுகிறது. இதற்கு நெடுந்தொகை என்ற மற்றொரு பெயரும் உண்டு. நாட்டை ஆளும் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க "குடவோலை முறை" பழக்கத்தில் இருந்ததென்ற அரசியல் செய்தி அகநானூறு வழி தெரிகிறது.



**S18. Ans.(d)**

**Sol.** மணிக்கொடி என்பது 1930களில் வெளிவந்த வரலாற்றுப் புகழ்மிக்கதொரு தமிழ் இதழ். இது முதலில் மாதம் இருமுறையும், பின்னர் வார(கிழமை) இதழாகவும் வெளிவந்தது 1935ல் நின்று போனது. பி. எஸ். ராமையா அவர்களின் முயற்சியால் பல்வேறு இதழ்களுடனும், நிறுவனங்களுடனும் சேர்ந்து மேலும் சில ஆண்டுகள் இவ்விதழ் வெளிவந்து 1939 ஆம் ஆண்டில் முற்றாக நின்று விட்டது.

**S19. Ans.(c)**

**Sol.** கல்கி (செப்டம்பர் 9, 1899 - டிசம்பர் 5, 1954) புகழ் பெற்ற தமிழ் எழுத்தாளர் ஆவார். இவர் இயற்பெயர் ரா. கிருஷ்ணமூர்த்தி. 35 சிறுகதைத் தொகுதிகள், புதினங்கள், கட்டுரைகள், பயணக்கட்டுரைகள் மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களை எழுதியுள்ளார். எனினும், மிகச் சிறந்த சமூக மற்றும் வரலாற்றுப் புதினங்களை எழுதியதற்காக பரவலாக அறியப்படுகிறார்.

**S20. Ans.(c)**

**Sol.** திருத்தக்க தேவர் ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சமணப் புலவர். ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணி என்னும் நூலை இயற்றியவர். இவர் நரிவிருத்தம் என்னும் நூலையும் எழுதியுள்ளார்.

**S21. Ans.(b)**

**Sol.** இவர் தமிழ்நாட்டில், நாகப்பட்டினம் மாவட்டத்தில், திருமறைக்காடு என்று அழைக்கப்படும் வேதாரண்யத்தில் பிறந்தார். இவர் பாடல்கள் 'தாயுமானவ சுவாமிகள் திருப்பாடற்றிரட்டு' என வழங்கப்படுகிறது. தமிழ் மொழியின் உபநிடதம் என அழைக்கப்படும்.

**S22. Ans.(b)**

**S23. Ans.(d)**

**Sol.** ஆறுமுக நாவலர் (டிசம்பர் 18, 1822 - டிசம்பர் 5, 1879) தமிழ் உரைநடை செவ்விய முறையில் வளர்வதற்கு உறுதுணையாய் நின்றவர். தமிழ், சைவம் இரண்டும் வாழப் பணிபுரிந்தவர்.

**S24. Ans.(b)**

**Sol.** உலகுபுரந் தூட்டும் உயர்பே ரொழுக்கத்துப்
புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
வையை யென்ற பொய்யாக் குலக்கொடி

**S25. Ans.(c)**

**Sol.** அகிலன் (Akilan) என்று அறியப்படும் பி. வி. அகிலாண்டம் (சூன் 27, 1922 - சனவரி 31, 1988) தமிழக எழுத்தாளர் ஆவார். எதார்த்தம் மற்றும் ஆக்கப்பூர்வமான எழுத்து நடைக்கு பெயர் பெற்றவராக அகிலன் அறியப்படுகிறார். அகிலன் ஒரு சுதந்திரப் போராட்ட வீரர் ஆவார். அகிலன் எழுதிய சித்திரப்பாவை என்ற வரலாற்று நாவல் 1975 ஆம் ஆண்டிற்கான மதிப்பு மிக்க ஞான பீட விருதை வென்றது.

**S26. Ans.(d)**

**Sol.** தாண்டவராயர் சென்னையை அடுத்துள்ள வில்லிப்பாக்கத்தில் பிறந்தவர். தமிழ் ஆர்வம் கொண்ட இவர் நீதிபதியாகவும் பணிபுரிந்துள்ளார்.

**S27. Ans.(c)**

**S28. Ans.(c)**

**S29. Ans.(d)**

**Sol.** கவிஞரேறு வாணிதாசன் (சூலை 22 1915 - ஆகத்து 7, 1974) புதுவையைச் சேர்ந்த தமிழறிஞரும், கவிஞரும் ஆவார். இவர் 'பாரதிதாசன் பரம்பரை' என்றழைக்கப்படும், பாவலர் தலைமுறையில் வருபவர். இவர் பிரெஞ்சு மொழியிலும் புலமை பெற்றவர். 'தமிழ்-பிரெஞ்சு கையகர முதலி' என்ற நூலை வெளியிட்டுள்ளார். பிரெஞ்சு குடியரசுத்தலைவர் இவருக்கு 'செவாலியர்' என்ற விருதினை வழங்கியுள்ளார். மேலும் 'கவிஞரேறு', 'பாவலர் மணி' முதலிய பட்டங்களும் வாணிதாசனுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**S30. Ans.(c)**

**Sol.** புதுமைப்பித்தன் என்ற புனைப்பெயர் கொண்ட சொ. விருத்தாசலம் (ஏப்ரல் 25, 1906 - சூன் 30, 1948), மிகச்சிறந்த தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவர். நவீன தமிழ் இலக்கியத்தின் ஒரு முன்னோடியாக இவர் கருதப்படுகிறார்.




STUDY MATERIALS
IN TAMIL
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB, UPSC etc.


JOB
ALERTS
IN TAMIL


DOWNLOAD ADDA247 APP
FREE STUDY MATERIALS IN
TAMIL & ENGLISH
• நடப்பு நிகழ்வுகள்- முக்கிய குறிப்புகள்
• முக்கிய வேலை வாய்ப்புகள்
• முக்கிய கட்டுரைகள் தினசரி
• புதிய தமிழ்நாடு பொது அறிவு வினா-விடை PDF
• மேலும் பல- தேசிய, மத்திய & மாநில அளவில்
YouTube : Adda247 Tamil
Telegram Channel : TNPSC Sure Shot Selection Group


DAILY QUIZ
in Tamil
for TNPSC, UPSC, IBPS, RRB,
SSC, IBPS RRB, IB, BIS,SBI, ETC.


DAILY CURRENT
AFFAIRS IN TAMIL
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB, UPSC etc.


BEST ARTICLES IN TAMIL
FOR EXAM PREPARATION
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB etc.


DOWNLOAD
Admit Card


வெற்றி வாராந்திர நடப்பு
நிகழ்வுகள் PDF தமிழில்
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB, UPSC etc.


UPCOMING JOB
ALERT ARTICLE
IN TAMIL
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB, UPSC etc.


TAMILNADU
STATE
GENERAL KNOWLEDGE
Q & A PDF
தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்
















**ADDA247 APP க்குச் செல்லுங்கள், தமிழ்நாடு மாநிலத் தேர்வு பிரிவில் பயிலுங்கள்.**

வெற்றிப்படி நமதே!!!